மாறுதல்கள் நேர்ந்துவரும் புரட்சிக்காலம் இது!

Phone No. 4502

விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458

[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (7—1—50) வெளியூர் (8—1—50) [இதழ் 137

மகுடங்கள் தகர்ந்து மறைய, சேர்ந்திருந்த நாடுகள் பிரிந்துபோதல் காண்கிறோம்!

———(o)———

'அந்நியனுக்கு நாடளித்து, அவரடிக்கீழ் பணி செய்வரா?'

———(o)———

'சோதிடப் பித்தலாட்டத்தை யொத்ததொரு பித்தலாட்டம்'

———(o)———

தமிழக எல்லை மாநாட்டில் கவிமணி தேசிக விநாயகம்

"இதுவோர் புரட்சிக் காலம். சிறிது காலத்துக்குள் எத்தனை யெத்தனை மாறுதல்களையே கண்ணால் பார்த்துவிட்டோம்! பாகிஸ்தான் ஏற்பட்டுத் தனிநாடாகப் பிரிந்து போனதைப் பார்க்கவில்லையா? மகுடங்களெல்லாம் தகர்ந்து மறைந்து போனதைப் பார்க்கவில்லையா? பன்னூறுண்டுகளாகச் சேர்ந்திருந்த நாடுகள் பிரிகின்றன. பிரிந்த நாடுகள் சேர்கின்றன. முடியாட்சி நீங்கிக் குடியாட்சி ஓங்கும் இக்காலத்தில் மக்கள் சாதி சமய வேறுபாடுகளை ஒழித்து, மொழியால் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வகையேற்படுவது இன்றியமையாதது. அதனாலேயே தெலுங்கர்கள் ஆந்திர மாகாணம் கேட்கிறார்கள். கன்னடர்களும் பிரிந்துபோக விரும்புகிறார்கள். கேரளீயர்களும் தனி மாகாணத்துக்கு அரும்பாடுபடுகிறார்கள். இவ்வேளையில் தென்திருவிதாங்கோட்டிலும், செங்கோட்டையிலும், தேவிகுளத்திலும், பீருமேட்டிலும் வாழும் தமிழர்கள் தங்களனைவரையும் தாய்த்தமிழ் நாட்டோடு சேர்க்க வேண்டுமென்று கேட்பதில் குற்றமென்ன இருக்கிறது?"

"திருமணத்துக்குச் சோதிடர்கள் பொருத்தம் பார்ப்பதுண்டு. நட்சத்திரப் பொருத்தம், கணப் பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், ஸ்திரீதீர்க்கப் பொருத்தம், இராசி அதிபதிப் பொருத்தம், வசியப்பொருத்தம், வேதைப் பொருத்தம், சரட்டுப் பொருத்தம் என்று பத்துப் பொருத்தம் சொல்வார்கள். இப்பத்துப் பொருத்தங்களும் ஒத்து இணைந்த மணமக்கள் ஆயிரவரில் எத்தனைபேர் இருக்க முடியும்? மனப்பொருத்தம் ஒன்றுதான் வேண்டியது" என்று கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள், கன்னியாகுமரியில் நடைபெற்ற தமிழக எல்லைமாநாட்டுத் திறப்புரையில் கூறினார்.

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் 6-1-50 அன்று குமரியில் நடைபெற்ற தமிழ்நாடு எல்லை மாநாட்டைத் திறந்துவைத்த கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம் வருமாறு:

பண்டைக் காலத்தில் தென் திருவிதாங்கோடு, பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆய்நாடு, தெங்க நாடு, படப்பா நாடு, வள்ளுவநாடு, குறுநாடு, நாஞ்சில்நாடு, புறத்தாய நாடு என்பவை அவற்றுள் முக்கியமானவை. இவை யாவும் செந்தமிழ் நாடுகளே என்பதைப் பல சாஸனங்களிலுள்ள தக்க ஆதாரங்களுடன் விளக்கியுள்ளேன்.

தமிழ் மக்கள் அனைவரும் இன்று ஒருங்கு கூடியிருக்கும் இத்தென் குமரியைப் பற்றிய சில விவரங்களை மட்டும் தெரிவிக்கத் துணிகின்றேன்.

இது பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஒரு ஊர் என்பதில் ஐயமில்லை. கலவெழுத்துக்களில் 'ராஜ ராஜப் பாண்டி நாட்டு உத்தம சோழவளநாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரி கன்னியா பகவதியார்' என்று குறிப்பிட்டுள்ளது. புறத்தாய நாடு என்பதற்கு முறத்தாட்ட நாடு என்பது வேறொரு பெயர். நாரணவசிநாடு என்ற பெயரும் இதற்குண்டு.

'ஸ்ரீ பாண்டி நாட்டுப்புறத்தாய நாட்டுத் தென்வாரணவசிநன்னாட்டுக் குமரி கன்னியா பகவதியார்'-என வரும் கல்வெட்டுத் தொடரால் இவற்றை யறியலாம். வாரணவாசி நாடு என்பது இரண்டாவது குலோத்துங்க சோழனுடைய பாட்டன பெயரால் ஏற்பட்ட பெயராம். இக்குமரிக்குக் 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற வேறொரு பெயரும் இருக்கிறது. கங்கைகொண்ட சோழன் என்பது முதல் ராஜேந்திரனுக்கு ஒரு சிறப்புப் பெயர். அதன் காரணமாக இப்பெயர் இதற்கு ஏற்பட்டிருக்கவேண்டும்.

தேவி கோவிலும், சற்று வடபாலிருக்கும் குகநாதேசுவரர் கோவிலும் இங்கு முக்கியமான கோவில்கள். இரண்டிடங்களிலும் ஏறக்குறைய நூறு கல்வெட்டுகளுக்குமேல் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டொன்றைத் தவிர மற்றவை யாவும் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டுள்ளவையே. குமரி கோவிலில் கோமாதின பீடத்தை சுற்றிப் பொறிக்கப்பட்டிருப்பது விஜயநகர வேந்தருடைய

(தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க)

இந்துமகாசபையினரைப் போர்வெறியர் என்கிறார் கிழக்குவங்கப்பிரதமர்!

பாகிஸ்தான் பேச்சை எடுக்காதீரென ஆப்பு!

இந்தியாவோடு இணைவதென்பது அர்த்தமும் பொருத்தமுமற்றதாம்

இந்தோ—பாகிஸ்தான் உறவு பற்றி கிழக்கு வங்கப் பிரதமர் ஜன 4-ந் தேதியன்று வருணித்தார்.

பாகிஸ்தான் எதிரிகளுக்கு எனது நேசமுறை ஆய்வுரை என்னவென்றால், "பாகிஸ்தான் பற்றிப்பேச்சை யெடுக்காதீர்; அதில் கைவைக்க வேண்டாம்" என்பதேயாகுமென்று குறிப்பிட்டார். இந்துமகாசபை அண்மையில் கல்கத்தாவில் கூடி தீர்மானம் நிறைவேற்றி யிருப்பதுபற்றிப் பேசினார் பிரதமர் தோழர் நூருல் அமீன்.

அவர் மேலும் கூறியதாவது: பண்டித நேரு அண்மையில் இந்துமகாசபைபற்றிக் கூறியது அரைமனதானதாகும் இந்தியாவையும் பாகிஸ்தானையும் மீண்டும் இணைக்க வேண்டுமென்று இப்போது பேசுவது அர்த்தமற்றதாகுமென்று நேரு குறிப்பிட்டிருக்கிறார் இப்போது அர்த்தமற்றதென்றால், இனி வரும் காலத்திலாவது அப்படி இணைக்க வேண்டுமெனப் பேசுவது அர்த்தமும், பொருத்தமும் உடையதாவெனக் கேட்கிறேன்.

"பாகிஸ்தானை இந்தியாவுக்குள் திரும்பக்கொண்டுவந்துவிடவேண்டுமென இந்துமகாசபை தீர்மானித்திருப்பதை இந்திய சர்க்காரோ, பொறுப்புள்ள இந்துமதத் தலைவர்களோ, மறுத்தோதுக்கிறாரில்லை.

"போர் வெறியர்கட்கு நானொன்று கூறுவேன்— ஆற்றலும் திறனும் ஒழுக்கச் சிறப்புமுள்ளோரிடத்தில் எங்கள் வாள்கள் கூர்மையுடன் பிரகாசித்து வருகின்றன. ஆதிக்கக்காரரை எதிர்த்து நிற்பதில் தங்கள் இறுதிச் சொட்டு இரத்தம் உள்ள வரை அவர்கள் பின்வாங்கமாட்டார்கள்."

பணந் திரட்டும் புதிய வழி

டிகாலேயின் வெற்றி தரும் திட்டம்

பாரிஸ், ஜன. 6—

பிரான்ஸின் தலைவராக மீண்டும் தவிர்க்கு வாமுயலும் டிகாலே பணம் திரட்ட ஒரு புது வழியைக் கண்டுபிடித்திருக்கிறார். அவர் டிகாலேயின் நண்பர்கள் சங்கம் என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார். இதற்கு மாத சந்தா ரூ. 13 என்று கூறப்படுகிறது.

இதுவரை இதன் மூலம் ரூ 20 0000 வரை டிகாலே சேர்த்துவிட்டாராம். கட்சியின் நிதி குறையவே, அதை ஈடுகட்ட இப்புதுவழி கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிப்ரவரியில்பார்மோஸா மீது கம்யூனிஸ்டுகள் படைஎடுப்பு!

மாசேதுங் திட்டம் பற்றி தேசீயவாதிகள்

ஹாங்ஹாங். ஜன. 6—

பார்மோஸா மீது படையெடுக்க சீனக் கம்யூனிஸ்டுகள் தீவிர முஸ்தீபைச் செய்து வருவதாகவே இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

யங்ஸியை வெற்றிகரமாகக் கடந்த பிரபல ஜெனரல் சென்யி இடம், இந்தப் பொறுப்பை மாசேதுங் ஒப்படைத்திருப்பதாகக்கூறப்படுகிறது.

இப்படையெடுப்பு பிப்ரவரி முதல் மேக்குள் எப்பொழுதாவது இருக்கும் என்று, பார்மோஸாவிலுள்ள தேசிய சீன வட்டாரத்தில் நம்பப்படுகிறது.

'டெய்லி மெயிலின்' பார்மோஸா நிருபர் கூறுவதாவது:—பார்மோஸாவை விட்டால் சீன தேசீயப் படையினருக்கு இனி தஞ்சம் புக வேறு இடமில்லை. ஆகவே, தீவிர எதிர்ப்புக்கு அவர்கள் தயாராகவே இருக்க வேண்டும். இதை உத்தேசித்து பார்மோஸா பொருளாதாரநெருக்கடியினால் பலவீனப் பட்டும் என்று மாசேதுங் காலந் தாழ்த்தக்கூடும்.

பரோடா மகாராஜா சொத்துக்கள் பகிரங்க ஏலத்துக்கு வரும!

———(o)———

குதிரைப் பந்தயத்தை மட்டும் விடும் எண்ணமில்லையாம்!

லண்டன், ஜன. 6—

பரோடா மகாராஜா பிரிட்டனிலுள்ள தன் சொத்துக்களை எல்லாம் விற்றுவிடப்போகிறார். மறுபடியும் அறிவிக்கப்படும்வரையில் மகாராஜா மகாராணி இவர்களுக்கான எவ்வித டெலிபோன் அழைப்புகளும் கவனிக்கப்படமாட்டாதென்று அவர் காரியதரிசி அறிவித்திருக்கிறார்.

மகாராணியின் பெயரிலுள்ள சொத்துக்கள் எல்லாம் விற்பனைக்கு அங்கமாக ஏலத்திற்கே வரும் என்று கூறப்படுகிறது.

எப்ஸம் அருகில் உள்ள பரோடாவின் பிரதமர் தங்குமிடம் விற்கப்பட்டுவிடுமா என்பதுபற்றி எவ்விதத் தகவல்களும் கிடைக்கவில்லை.

ஆனால் குதிரைப் பந்தயத்தை மட்டும் மகாராஜா விட்டுவிடப்போவதில்லை என்று அவர் காரியதரிசி கூறியதாக ஒரு செய்தி கூறுகிறது

பரோடா மகாராஜா சீக்கிரமே பம்பாய்க்கு வருவார் என்று தெரிகிறது. பரோடா பம்பாயுடன் இணைக்கப்பட்டதிலிருந்து அவர் வருமானம் மிகவும் குறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

செஞ்சீனாவுக்கு பாகிஸ்தான் அங்கீகாரம்

சீனக் கம்யூனிஸ்டு சர்க்காருக்கு பாகிஸ்தான் அங்கீகாரம் வழங்கிவிட்டது. பாகிஸ்தான் சர்க்கார் ஜன 4-ந் தேதியன்று வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பொன்றின் மூலம் இது தெரியவருகிறது.

மாலை மணி

சென்னை 7—1—50 சனிக்கிழமை

முறியவில்லை, :: :: முடிவுபெறவுமில்லை

ஓராண்டு நிலவரியைக் கட்டாயக் கடனாகப் பெறுவது என்று, சென்னை ஆட்சிக் குழுவினர் தீட்டிய திட்டம், இன்னமும் மாண்டு மடியவில்லையாம்! மாறாக மலர்ந்து கொண்டுதானிருக்கின்றதாம்!

கட்டாய நிலவரிக் கடனை எம்முறையில் வசூலிப்பது என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லையானாலும், அத்திட்டம் கைவிடப்படவில்லை என்றும், இந்தத் திட்டத்தைச் சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவர மத்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துவிட்டதாகவும் என்றும் சென்னை நிதி அமைச்சர் கோபாலர், சட்ட சபையில் கேள்விக்கு விடையிறுக்கும் போது கூறியுள்ளார்.

கட்டாய நிலவரிக் கடன் வசூலிப்பது பற்றி சட்ட சபை உறுப்பினர்கள் பலர் சரமாரியாகக் கேள்விகள் கேட்டுள்ளனர். அவை அனைத்திற்கும், ஏதோ பதில் கூறிவிட்டோம் என்ற சமாதானத்தைப் பெற நிதி அமைச்சர் முயன்றிருப்பதாகத் தெரிகிறதே யல்லாமல், தாம் என்ன கூறுகிறோம் என் பதில் அக்கரை காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. பதில்கள் உண்மை நிலையை விளக்குவனவாகவோ, ஐயங்களை, அபாயங்களைப் போக்குவனவாகவோ இருக்கவில்லை. "பார்ப்பாத்தி அம்மா, மாடு வந்தது, கட்டினால் கட்டு, கட்டாவிட்டால் போ" என்ற பழமொழிப்படி, காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் செய்கிறோம், கேட்டால் கேளுங்கள், கேட்காவிட்டால் போங்கள் என்று மந்திரியாரின் மறுமொழிகள் அமைந்துகிடக்கின்றனவே யல்லாமல் நாட்டின் நிலையுணர்ந்து, எற்றது செய்து எழில் உண்டாக்குவோம் என்பதைத் தெளிவுபடுத்துவனவாக அமையவில்லை.

கட்டாய நிலவரிக் கடன் கேட்பது காலநிலைக்கும் எற்றதல்ல; குடியானவர்களின் பொருளாதார நிலைக்கும் ஒத்ததல்ல; அரசாங்கத்திற்கும் அழகல்ல; ஆகவே அந்தத் திட்டத்தைக் கைவிட்டு, வேறு வழிதேட வேண்டும் அரசாங்கம்; என்று பெரும்பாலான பத்திரிகைகளும், நாட்டு நிலையுணர்ந்தோரும், நல்லறிவாளர்களும் எடுத்துக் கூறிக்கண்டனந் தெரிவித்து வந்திருப்பதைப் பொதுமக்கள் நன்கு உணர்வார்கள். இதை அமைச்சர் உணர்வாரா என்று தோழர் சலாம் சட்டசபையில் கேட்டபொழுது மந்திரியார், மறுப்புகளைத் தாம் அறிந்துள்ளதாகவும், ஆனால் பிரபல மிராசுதாரர்களையும், பிரபல பட்டாதாரர்களையும் தாம் கலந்தாலோசித்த பொழுது, கட்டாயக்கடன் வசூலிக்கும் திட்டத்திற்கு அவர்களெல்லோரும் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் கூறியுள்ளார் பத்திரிகைக்காரர்கள் எழுதிய மறுப்புகளை அறிந்துள்ளார் அமைச்சர்! உண்மை அப்படியேயானால் மகிழ்ச்சி! அந்தமறுப்புகளுக்கு என்னபதில், என்ன சமாதானம்? எதாவது உண்டா, எனில், இல்லை! பிரபல மிராசுதாரர்கள் பட்டாதாரர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்பதே அமைச்சர் தர விரும்பும் பதில்! பிரபல மிராசுதாரர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள்! அவர்கள் ஒப்புக்கொள்ளாதால் அவர்களுக்கு என்ன அலாதிக் கஷ்டம் ஏற்பட்டு விடப்போகிறது. அவர்களை ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்று கூறிப்பூரிப்படைகிறார் அமைச்சர்? கட்டாய நிலவரிக்கடன் செலுத்துவதால், வடபாதி மங்கலத்தாருக்கோ, நெடும்பலத்தாருக்கோ சீயாழியாருக்கோ, தர்மபுரத்தாருக்கோ, திருவாவடுதுறையாருக்கோ என்ன ஆபத்து ஏற்பட்டுவிடப் போகிறது? அமைச்சர் சம்மதம் கேட்கும்போது அத்தகையோர் சம்மதம் கூறுமல், சமாபுரிவர்? அவர்களுக்கிருக்கும் கஷ்டமெல்லாம் சம்மதம் தெரிவிப்பதிலில்லை, சம்மதம் தெரிவிக்காமலிருப்பதில்தான்; சம்மதம் தெரிவிக்காவிட்டால், காங்கிரஸ் ஆட்சியில் என்ன ஆபத்து, எப்படி வந்து தாக்குமோ, என்று அவர்கள் கதிகலங்க வேண்டியிருக்கிறது! ஆகவேதான் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்! அந்த ஒப்புதல் உண்மை நிலையை உணர்த்துவதல்லவே! உண்மைநிலையைஉள்ளபடியே உணர்த்துவோர் ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளே யல்லாமல், விரல்விட்டு எண்ணக் கூடிய பிரபல மிராசுதாரர்கள் அல்லவே!

கடன்பட்டு, வறுமையால் பிடிக்கப்பட்டு குறைச்சல் விளைவால் கஷ்டப்பட்டு ஓராண்டு கிஸ்தியே ஒழுங்காக செலுத்த முடியாமல் உடைந்த வாழ்வோடு காட்சியளிக்கும் ஏழை விவசாயி, எப்படி கடன் கொடுத்துதவ முடியும்? அவன் ஏன் கடன் கொடுக்கவேண்டும்? கடன் கொடுத்துதவக்கூடிய முதலாளிகள் பணக்காரர்கள் — ஆலை அரசுகள் — மடாதிபதிகள் — கடவுளர்கள் இருக்கும்போது அவர்களையெல்லாம் விட்டுவிட்டு, ஏன் ஏழையர்களே ஏராளமாக நிறைந்திருக்கும் விவசாயத் தொழில் மீது கடன் சுமையை எற்றவேண்டும்! இதுதான் ஏழை பங்காளர் ஆட்சியின் இலட்சணமா?

பொது மார்க்கட்டின்மூலம் என் பொது மக்களிடம் பொதுக்கடன் திரட்டக்கூடாது என்று தோழர் பீகம் அமிருதீன் கேட்ட கேள்விக்கு, நாட்டின் சூழ்நிலை அதற்கு இடங் கொடுக்கவில்லை என்று மந்திரியார் பதில் கூறுகிறார். நாட்டின் எந்த சூழ்நிலை அதற்கு இடங் கொடுக்கவில்லை என்றாவது அமைச்சர் விளக்கியிருக்க வேண்டும்? பொதுக் கடன் திரட்டுவதற்கு மட்டும் இடங்கொடுக்காத சூழ்நிலை, கட்டாய நிலவரிக் கடனை மட்டும் வசூலிக்க எப்படி இடங் கொடுத்ததோ தெரியவில்லை? அமைச்சரின் கூற்றுக்களைப் பார்க்கும்போது, நாட்டில் உள்ள நிலையை அறிந்துகொள்ள அவர் மறுக்கிறார் என்பது தான் வெளிப்படையாகத் தெரிகிறது.

காங்கிரஸ் அரசாங்கத்தின் அணைப்பு முதலாளிகள்-பணக்காரர்கள் பக்கமும், ஆத்திரம் ஏழை-எளியவர் பக்கமும் சாய்கின்றன? முடிவு என்னகும் என்பதை இப்பொழுதே காங்கிரஸ் உணர்ந்துகொள்வது அதற்குத்தானே நல்லது, முன்னாள் பிரதமர் ஓமந்தூரார் கூறுகிற கூற்றுப்படி!

கட்டாய நிலவரிக் கடன் வசூலிக்கும் திட்டம் முறியவில்லை; முடிவு பெறவுமில்லை! என்று கூறுவது ஆணவத்தைக் காட்டுமே யொழிய, அறிவுடைமையை உணர்த்தாது!

பொத்தனூரில் (சேலம்) பொதுக்கூட்டம்

10—1—50 செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு பொத்தனூர் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெறும்.

அதுபோது தோழர்கள்

சி. என். அண்ணாத்துரை

அ. சித்தையன்

ஜி. பி. சோமசுந்தரம்

ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்

இந்தியாவில் 'அஸ்பெஸ்டாஸ்'

லண்டன், ஜன. 6—

[illegible] இந்தியாவின் [illegible] பல [illegible] இருந்து [illegible]

அறிவுக் கதிர்!

ஒரு மொழி தேசீய மொழியாக வேண்டுமானால் அது தேசத்திற்கு கலைஞர்களை, அறிவாளிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கவேண்டும். அப்படி ஹிந்தி யாரையாகிலும் தோற்றுவித்திருக்கிறதா? ஆங்கிலத்தோடு அதை ஒப்பிட்டுப் பாருங்கள். ஆங்கிலம் ஹிந்தி ஆகிய இரண்டு மொழிகளில் எது சிறந்த மொழி? ஒரு தமிழ் நாட்டுச் சிறு குழந்தையைக் கேளுங்கள்; அதுகூடச் சொல்லும் ஆங்கிலந்தான் சிறந்ததென்று

—தமிழ்ப் பெரியார் திரு வி. க.

பொங்கல் விழா :: :: கொண்டாடுக!

பொங்கல் விழா — அறுவடை விழா — உழவர் தம் பெருவிழா — மகிழ்ச்சிவிழா!

உழவுத் தொழில் திராவிடத்தின் அச்சாணி போன்றது—எனவே பொங்கல் பெருநாள் திராவிடர் தம் திருநாள்!

பொங்கல் திருநாள்—தை முதல்நாள்—திராவிடர்க்கு ஆண்டின் முதல் நாள்!

ஆற்றிய கடமை கண்டு மகிழவும், ஆற்றவேண்டிய கடமை நெறி உணரவும் அந்நாள் நாட்டவர் அனைவர்க்கும் பயன்படும் நன்னாள்!

திராவிடத்தின் தனிப்பெரும் இயக்கமாக இருந்து பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகம், பொங்கற் பெருநாள் விழாவைக் கொண்டாட வேண்டிய தனிக் கடமையும் தனிச் சிறப்புங் கொண்டாடவேண்டிய தனிக் கடமையும். தனிச் சிறப்பும் கொண்டதாகும்.

எனவேதான், பொங்கல் விழாவைத் தக்கமுறையில் கொண்டாடும்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகக் கொடியேற்றுதல் — ஊர்வலம் நடத்துதல் — பொதுக் கூட்டம் கூட்டுதல் — இன்னிசையரங்கு அமைத்தல் — நாடகம் ஆடிக் காட்டுதல் — எழுத்துப் போட்டி, பேச்சுப் போட்டி, இசைப் போட்டி, நடிப்புப் போட்டி, உடற்பயிற்சிப்போட்டி, ஓட்டப்பந்தயப் போட்டி, பந்து விளையாட்டுப் போட்டி, மாடுகள் பிடிக்கும், போட்டி ஆகிய போட்டிகள் அமைத்தும் பரிசுகள் வழங்குதல் ஏழை எளியவர்கட்கு இன்னமுது வழங்குதல், போன்றவைகளில் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்றபடி அமைத்துக்கொண்டு விழாவினைச் சீரியமுறையில் கொண்டாடுக!

உறுப்பினர் சேர்த்தல் போன்ற கடமையையும் களிப்போடு இயற்றுக!

கொடி ஏற்றுமின்! கொள்கையை விளக்குமின்!

உறுதிகொள்க! செயலாற்றுக சிறந்துவிளங்குக!

இரா. நெடுஞ்செழியன்

செயலர் பிரசாரக்குழு தி. மு. க. தலைமை நிலையம்

கிரீஸ் சேனாதிபதி ராஜிநாமா

அரசியலில் இறங்குவார்

லண்டன், ஜன. 6—

கிரீஸ் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களை முறியடித்து வெற்றி பெற்ற சேனாதிபதி பேபாகாஸ் தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். ஏப்ரலில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் அவர் தனியாக ஒரு கட்சி அமைத்து அதன் மூலம் போட்டியிடுவர் என்று கூறப்படுகிறது. பெரிய கட்சியான பாபுலரிஸ்ட் கட்சி தலைவர் ஸல்டாரிஸிடமிருந்து இவருக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

பாரபினில் ஓடும் கார்கள்

லண்டன், ஜன 5—

பெட்ரோல் இல்லாமல் பாரபினிலேயே ஓடக்கூடிய 'காஸ் டர்பைன்' மோட்டார்களை பிரிட்டிஷ் ஆராய்ச்சி வல்லுநர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர் இந்த கார்களுக்கு பிஸ்டன் ஸிலிண்டர்ஸ் கார்ப்பிளக் முதலியவைகள் கிடையாதாம்

இந்த டர்பைன்கஸ் மோட்டார்கார்களைச் செய்வதில் அநேகமாக எல்லா மோட்டார் கம்பெனிகளுமே கவனத்தை செலுத்திவருகிறது சீக்கிரமே இக் கார்களுக்கு உலகில் கிராக்கி ஏற்பட்டுவிடுமென்று தெரிகிறது இந்த மோட்டாரை வைத்துக்கொள்ள ஆகும் செலவு மிகவும் குறைகிறதாம் பவாரிக்கும் இவை சுகமாக இருக்கின்றனவாம்.

மைசூர் தொழில் இலாகா உதவி டைரெக்டர் தோழர் கே. எல் நஞ்சப்பா, இந்திய சர்க்காரின் குடிசைத் தொழில்கள் டெபுடி டெவலப்மெண்ட் ஆபீஸராக நியமிக்கப்பெற்றுள்ளார். மூன்றாண்டுகளுக்கு அவரது சர்வீஸ் கடன் பெறப்பட்டிருக்கிறது.

பார்லிமெண்டில் ரகசிய 'மைக்ரோபோன்கள்'

பான், ஜன. 5—

மேற்கு ஜெர்மனியின் தலைநகரான பான் நகரிலுள்ள பார்லிமெண்டில் தலைவர்கள் ரகசியமாகக் கூடி ஆலோசனை செய்யும் அறைகளில் சில மைக்ரோபோன்கள் ஒளித்துவைக்கப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அதிகாரிகளே இதைக் கண்டுபிடித்தனர். ரகசியமாக சர்க்கார் தலைவர்கள் செய்யும் முடிவுகள் எல்லாம் எப்படியோ பார்லிமெண்டின் கம்யூனிஸ்ட் மெம்பர்களுக்கு முன்னதாகவே தெரிந்து வந்ததிலிருந்தே சந்தேகம் ஏற்பட்டது.

காவற் கைதிகள் உண்ணாவிரதம்

டல்லி பாளையம் சிறையிலுள்ள கம்யூனிஸ்ட் — தொழிற்சங்கக் காவற் கைதிகள் அறுவர் ஜனவரி 5-ந் தேதிமுதல் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கின்றனரெனத் தெரிகிறது. அக்கைதிகள் தங்கள் கோரிக்கைகளை நிறைவு செய்யத் தவறியமையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

உடனடி விடுதலை, அல்லது சட்ட பூர்வமான விசாரணை, மெக்ஞூம் பஞ்சாப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்தல், கம்யூனிஸ்ட் காவற் கைதிகளுக்கும் ஒரே மாதிரியான அன்பு, ஆகிய [illegible] ஆகியவையே உண்ணாவிரதக்காரரின் கோரிக்கைகளெனத் தெரிகிறது.

மேட்டூர் தண்ணீர்சப்ளைத்திட்டம்

சேலம் நகரசபையின் மேட்டூர் நீர் சப்ளைத் திட்டத்தை (சீராக) நிறைவேறுமளவுக்கு, அமுல் நடத்துவது பற்றி கட்டுச் சில மாதங்களாக அதிதீவிர ஏற்பாடுகள் நடந்துவருவதாகத் தெரிகிறது. சேலம்—அம்மாப்பேட்டையில் தண்ணீர்த் தேக்கக் கட்டடம் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

[கற்பனை உரையாடல் :]

கண்டதும் கேட்டதும்

[துப்பறிவோன்]

உரையாடுவோர்: ஆராவமுதய்யங்கார், ராமச்சந்திர ஐயர் என்னும் இரு பள்ளி ஆசிரியர்கள்.

இடம்: விவேகானந்தர் காலேஜ் சென்னை

காலம்: மாலை

ராம: (பத்திரிகை படித்துக் கொண்டிருக்கும் ஆராவமுதய்யங்காரைப் பார்த்து) என்ன அய்யங்கார் சார், பேப்பரில் விசேஷம் ஏதாச்சும் உண்டா? ஹெட்மாஸ்டர்ஸ் கான்பரன்ஸ் பத்திய நியூஸ் வந்திருக்கா பார்த்தியளா?

ஆரா: ஆமாம் சார், அதைத்தான் பார்த்திண்டிருக்கேன். மாநாடு நன்னா நடந்திருக்கு; பேசினவாளெல்லாம் நன்னா பேசியிருக்கா.

ராம: அதிருக்கட்டும் சார், இந்த கான்பரன்ஸ் மாட்டோ தான் என்ன?

ஆரா: மாட்டோ என்ன... எல்லாம் நமக்குத் தெரிஞ்ச விஷயந்தானே! இந்த எஜுகேஷனல் இன்ஸ்டிடூஷன்களெல்லாம் ஒழுங்குபடுத்தனும் ஸ்கூல்ஸ், காலேஜஸ் இங்கெல்லாம் சு. ம. பிரசாரம் நடக்கிறது பாருங்கோ, அதையெல்லாம் ஒழிச்சுக்கட்டனும்.

ராம: ஆமாம் சார், இப்ப சொன்னயளே அது வாஸ்தவம் சார். வரவர அந்தத் தொல்லைன்னா பெரிசா போச்சு. பசங்க எதுக்கெடுத்தாலும் அது ஏன் அப்படி, இது ஏன் இப்படின்னெல்லாம் நம்மையே கிராஸ்பண்ண ஆரம்பிச்சுட்டாங்கோ! பாருங்கோ ஒரு சின்ன விஷயம்; கிளாசிலே சயின்ஸ் டீச் பண்ணிண்டிருக்கச்சே உலகம் உருண்டையாயிருக்குன்னு சொன்னேன். உடனே ஒரு பய எழுந்து என்னைக் கேட்கிறான், "ஏன் சார் தமிழ் வாத்தியார் உலகம் தட்டையாயிருக்குன்னு புராணத்திலே சொல்லியிருக்குன்னு சொன்னாரே, அவரு சொல்றது சரியா நீங்க சொல்றது சரியா" அப்படியின்னு கேட்கிறான். அவனுக்கு என்ன பதில் சொல்றது.

ஆரா: ஆமாம் சார்...... ஆமாம்......... இந்தப் பசங்க பண்ற அமக்களமிருக்கே சொல்ல முடியாது சார். அவன்களுக்கு என்ன பதில் சொல்றதுன்னே புரியல்லே.. பதில் சொல்லாவிட்டாலும் விடமாட்டேன்கிறான்கள்.

ராம: நோ...நோ... இதுக்கெல்லாம் இடங்கொடுக்கப்படாது சார். நன்னா பனிஷ் பண்ணனும்.

ஆரா: என்னத்தே பனிஷ் பண்றது! எல்லாம் பண்ணி பார்த்தாச்சு சார். விஷயம் வளுக்கிறதேயொழிய கொஞ்சங்கூட குறைஞ்சதாத் தெரியல. பயல்க அடங்கமாட்டேன்கிறான்களே!

ராம: எப்படி சார் அடங்குவான்கள்! எல்லாம் இந்த டமில் டீச்சர்ஸாலே வர்ற வம்பு சார். அவர்தான் புராணம் பொய், ஜாதியில்லே, மதமில்லே கடவுளுக்குக் கண்ணு மூக்கு ஏது, அப்படி இப்படின்னு என்னென்னமோ சொல்லிக்கொடுக்க ஆரம்பிச்சுட்டாங்கோ.

ஆரா: எஸ், எஸ். யூவார் கரெக்ட்; எல்லா அந்த டமில் பண்டிட்ஸாலே வர்றதுதான் அதுக்கு என்ன செய்து தொலைக்கிறது. எந்த டமில் பண்டிட்டைப் பார்த்தாலும் சு. ம. காரன்களாகத்தானே யிருக்கான்கோ.

ராம: ஆமாம் சார், அதனாலேதான் நம்ப அவினாசிலிங்கம் செட்டியாருக்கு இந்த டமில் பண்டிட்ஸ் என்றாலே பிடிக்கிறதில்லே. எப்ப பார்த்தாலும் அவாமேலே எரிஞ்சு விழுந்துண்டு தானே இருந்தார்.

ஆரா: அதுமட்டுமில்லே, அவா சம்பளத்தை ரெயிஸ் பண்ணாம இருந்ததும் அதனாலேதான்னு சொல்லுவா!

ராம: எஸ், எஸ் அவாளை யென்ன செய்தாலும் தகும் சார்!

ஆரா: அவாளை மட்டும் சொல்லிப் பிரயோஜனமில்லே சார், அந்த நான்-பிராமின் டீச்சர்ஸ் எல்லாமே அப்படித்தானே இருக்கா!

ராம: ஆமாம்; ஆமாம்; அது மட்டுமில்லே சார் எங்கபோனாலும் இப்போ இந்த பிராமின், நான்—பிராமின் பிராப்ளம் தானே பெரிசா இருக்கு!

ஆரா: ஆ, அந்தப் பிராப்ளம் கூட அவ்வளவ பிராதம் இல்லே சார், இந்த சு. ம பிராப்ளந்தானே சார் பெரிய தொல்லையாயிருக்கு எந்த பசங்க கையிலே பார்த்தாலும் ஏதாச்சும் சு. ம புக்ஸ் இருந்துண்டு தானேயிருக்கு!

ராம: புக்ஸ் மாத்திரமா! பேப்பர் கூட 'திராவிடநாடு' பத்திரிகை படிக்காத பயல்களே கிடையாது. ஸ்கூல் லெசன்லை கூட அவ்வளவு அக்கறையாக படிக்க மாட்டேன்கின்றான்களே!

ஆரா: ராமா, ராமா அதை யேன்கேட்கிறியள் அந்தமாதிரி பேப்பர் படிக்கிற பயல்களையெல்லாம் எவ்வளவோ பயமுறுத்திப் பார்த்தாச்சு! ஒண்ணும் பலனில்லே.

ராம: நோ, நோ அப்படிச் சொல்லப்படாது. அந்தமாதிரி பயல்களை சும்மாவிடக்கூடாது கையிலே ஏதாச்சும் சு. ம. பேப்பரோ புக்ஸோ வச்சிருந்தா, அதையெல்லாம் பிடுங்கி எறிஞ்சுட வேண்டாமா.

ஆரா: நன்னா சொன்னியள்; அச்சூரிலே நம்ம ராமகிருஷ்ணா மிஷன் ஸ்கூல் இருக்கு பாருங்கோ...?

ராம: ஆமாம்!

ஆரா: அங்கே ஆக்சுவலா அப்படியே நடந்தது. யாரோ சில பயல்கள் 'திராவிடநாடு' பத்திரிகை, அண்ணாதுரை எழுதின புஸ்தகம் இதெல்லாம் வச்சிண்டிருந்தான்கோ.

ராம: ஓகோ! அங்கேகூட சு ம காரன்கள் படிக்கிறான்களா?

ஆரா: அதையேன் கேட்கிறீர்! இப்பத்தான் அங்கே கொஞ்சம் நுழைஞ்சிருக்கு. ஆனால், அந்த ஸ்கூல் சமாச்சாரம்தான் நமக்குத் தெரியுமே.

ராம: அதுதான் கம்ப்ளீட்டா பிராமின் இன்ஸ்டிடூஷனாச்சே! அங்கே எப்படி இடங்கொடுத்தா! உம்! அப்புறம் என்ன நடந்தது?

ஆரா: நடக்கிறதென்ன அந்தபேப்பர், புஸ்தகம் இதையெல்லாம் பிடுங்கிக் கிணத்திலே போட்டா, இப்போ பயல்கள் வாயை மூடிண்டு கிடக்கிறான்கோ.

ராம: ஆமாம் சார், அப்படிப்பட்ட பயல்களையெல்லாம் சும்மாவிடப்படாது.

ஆரா: அது சரிதான் சார். ஆனால் டைரக்டா எப்படிக் கண்டிக்கிறது? இத்தனைக்கும் அங்கே ஹாஸ்டல்லே அவாளுக்குச் சரியான சாப்பாடுகூட கொடுக்கிறதில்லே! அவாளுக்கு ட்ரீட்மெண்டே ஒரு அலாதி ட்ரீட்மெண்டு தான்!! அப்படியிருந்தும் சு. ம. பசங்களொட்டம் அடங்கலியே.

ராம: இன்னமே இந்த நான்—பிராமின் பசங்களையே நம்ம ஸ்கூல்லே சேர்க்கக்கூடாது சார்.

ஆரா: அப்படிச் செய்தாதான் தேவலையே! ஆனால் அதுதானே முடியலே. அது மட்டுமில்லே. அப்படிச் செய்தாலும் தப்பு. நம்மவாளுக்கு எதிர்ப்பு ஜாஸ்தியாயிடும். இப்பவே நம்ம பசங்களுக்குக் காலேஜிலே சீட் கிடைக்கிறது கஷ்டமாயிருக்கு.

ராம: சரி, அது கிடக்கட்டும் வேறு எதாச்சும் விசேஷமுண்டா?

ஆரா: வேறே என்ன இருக்கு ஸ்கூல் பத்தினவரைக்கும் இவ்வளவுதான் வெளியே, பாலிடிக்ஸிலே இன்னும் எவ்வளவோ ட்ரபிள் இருக்கு. அதெல்லாம் பேச ஆரம்பிச்சா நேரமாயிடும். ஆத்துக்குப் போகணும். அத்திலே எல்லாம் எக்சிபிஷனுக்குப் போகணுமின்னு சொல்லிண்டிருந்தா... போய் அழைச்சுண்டு போகணும். நேரமாறது. நான் வரட்டுமா.

ராம: ஆகா!

(இருவரும் பிரிந்து செல்கின்றனர்)

சிறையிலிருந்து தப்பினர்

ஏடன், ஜன. 6—

சுதந்திர ஏமன் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான அபதுஸ்ஸலாம் என்பவர் ஹஜ்ஜ சிறையிலிருந்து தப்பி, ஏடன் எல்லையைத் தாண்டிச் சென்றுவிட்டார். இவர் ஒரு தடவை அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டு மீண்டும் தப்பிச் சென்றுவிட்டார். ஏடனில் கலகம் ஏற்படக் காரணமாக இருந்தது, சுதந்திர ஏமன் இயக்கக் கட்சி தான்.

சென்னை மாவட்ட

தி. மு. க. முதல் மாநாடு

நாள் :— 22–1–50 ஞாயிறு

நேரம் :— காலை 9-மணிக்குத் துவக்கம்

இடம் :— 'பீப்பிள்ஸ் பார்க்' மிருகக் கண்காட்சி சாலைக்குப் பின்புறமுள்ள மைதானத்தில் 'அழகிரி பந்தலில்'

தலைவர் :— சேலம் ஏ. சித்தையன்

துவக்குபவர் :— மதுரை எஸ். முத்து

இரவு 9-30 மணிக்கு

சி. என். ஏ, கே. ஆர். ஆர். நடிக்கும்

'சந்திரமோகன்' நாடகம் நடைபெறும்

விவரங்கட்கு :— கே. கோவிந்தசாமி,

செயலாளர், செ. மா. தி. மு. க. முதல் மாநாடு

2/45, முத்துமாரிச் செட்டித் தெரு, சென்னை-1.

பாய்லர் வெடிப்பைக் கண்டுபிடிக்க புதிய கருவி

சென்னை, ஜன. 5—

பாய்லர் ப்ளேட்டுகளை ஒன்று சேர்ப்பதற்கு 'ப்யூஷன்வெல்டு' என்ற ஒரு புதிய கருவி, ஸ்காட்லண்ட் க்ளைட் பாய்லர் வொர்க்ஸ் என்ற கம்பெனியிலிருந்து சென்னை சிவ் பாய்லர் பிரைவேட் இன்ஸ்பெக்டர் ஆபீசுக்கு கிடைத்திருக்கின்றது.

இக்கருவி இரண்டு பாய்லர் பிளேட்டுகளை ஒன்றாக இணைக்கும் பழைய முறையான ஆணிகளின் அடிக்கும் இணைக்கும் முறைகளைவிடப் பாய்லரின் ஆயுளைக் குறைத்து விடுகின்றபடியினாலும் இக்கருவி மிகப்பயன் உள்ளதெனக் கருதப்படுகிறது.

இணைக்கும் பொழுதும், இணைக்கப்பட்டபிறகும் பாய்லர்களில் ஏதாவது குறைகள் இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்கு "ரேடியோ கிராப் பிலிம்" என்ற கருவியும் இந்த ஆபீஸ் பெற்றிருக்கின்றது.

பாய்லர்களின் மீது கண்ணுக்குத் தெரியாத வெடிப்புகளைக் கண்டு பிடிக்கும் மிக நூதனமான 'க்ராக் டிடெக்டர்' என்ற ஒரு கருவியும் இந்த ஆபீஸ் பெற்றிருக்கின்றது.

இதன் மூலம் சிறிய இரும்புகளை வெடிப்பு உள்ள பாய்லரின் மீது தூவுகின்றதாம். பின்னர் இக்கருவியைக் கொண்டு ஒரு சிறிய காந்தத்தை பாய்லர் ப்ளேட்டிற்குப் பின்புறத்தில் வைத்து அசைத்தால் காந்த ஆகர்ஷண சக்தியின் விளைவால் இரும்புப் பொடிகள் நகருமாம். எவ்விடத்தில் வெடிப்பு இருக்கின்றதோ அவ்விடத்தில் மாத்திரம் இரும்புப் பொடிகள் அசையாமல் இருப்பதைக் கண்டு வெடிப்பு இருக்குமிடத்தை இதன்மூலம் அறியலாம்"

—————

முன்னாள் மன்னரை ஆப்கன் மன்னர் சந்தித்தார்

பாரிஸ், ஜன. 6—

முன்னாள் மன்னர் அமனுல்லாவை, நைஸ் என்ற இடத்தில் ஆப்கன் மன்னர் சென்றவாரம் கண்டு பேசினார். இந்த சந்திப்பு விஷயமாகப் பலவித ஊகங்கள் கிளம்பியிருக்கின்றன.

நாற்பது யானைகளைக் கொன்று கிறிஸ்துமஸ் கார்டு!

லண்டன், ஜன. 5—

நேற்று பரோடா கேபக்வார் ரூ. 2700000 செலவில் வைரம் பதித்த ஒரு தந்த கிறிஸ்துமஸ் கார்டை செய்ய உத்தரவிட்டார் என்றும், உலகிலேயே மிகவும் விலை மதிப்புள்ள கிறிஸ்துமஸ் கார்டு இதுதான் என்றும் யுனிவர்ஸ் என்ற பெயருள்ள ரோமன் கத்தோலிக்க பத்திரிகை ஒன்று கூறுகிறது.

இக்கார்டு பற்றி அதில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களாவன:—இதற்கு வேண்டிய தந்தத்திற்காக 40 யானைகள் கொல்லப்பட்டனவென்று தெரிகிறது. இதில் சித்திர வேலைகள் செய்த ஏழு சித்திரவேலை வல்லுநர்கள் 6 மாத காலம் வேலை செய்திருக்கின்றனர். மதிநுட்பமான நுணுக்க வேலைப்பாடுகளைச் செய்ததின் விளைவாக ஒரு வல்லுநர் தன் கண்பார்வையையே இழக்க நேரிட்டது.

இந்தக் கார்டில் புத்தர் பிரானின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட சுமார் 4000 காட்சிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. கடுகளவுள்ள 44 வைரங்கள் இக்கார்டு சுற்றிலும் பதிக்கப்பட்டிருக்கின்றன. கெய்க்வார் இந்த கார்டை யாருக்குப் பரிசாக அனுப்பினார் என்பதை இவ்விவரங்களை எழுதியவர் குறிப்பிடவில்லை.

—————

எகிப்தின் புது பிரதமர் பற்றி பிரிட்டிஷ் கருத்து

லண்டன், ஜன. 5—

எகிப்தின் புது பிரதமரான நாஹஸ்பாஷாவைப் பற்றிக் குறித்து பிரிட்டிஷ் அயல் நாட்டு விவகார அதிகாரி ஒருவர் கூறியதாவது:—

எகிப்தில் பலமான சர்க்கார் இருக்கவேண்டும் என்றே பிரிட்டன் விரும்புகிறது. அவருக்கு பிரிட்டிஷாரிடம் விரோத மனப்பான்மை எதுவும் கிடையாது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது எகிப்தின் பிரதமர் என்ற ஹோதாவில் நஹஸ்பாஷா பிரிட்டனுக்குப் பேருதவி செய்திருக்கிறார். 1936ல் கையெழுத்தான பிரிட்டிஷ் எகிப்து உடன்படிக்கையைத் திருத்தவேண்டும் என்று போர் முடிந்தபின் செய்யப்பட்ட முயற்சி தோல்வியுற்றதற்குக் காரணம் அவருடைய வபத் கட்சி அதிகாரத்திலில்லாதது தான்.

★ நாட்டு நடப்பு ★

பழைய மாணவர் கழகம்

துறையூர், ஜன. 6—

இன்று (30-12-49 மாலை 4-30 மணிக்கு, துறையூர் வெங்கடேஸ்வரா உயர்தரப்பள்ளியின் பழைய மாணவர்க்கழக பொதுக்குழு கூட்டம் இப்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியர் வித்வான் வீ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் கூடியது ஆண்டு அறிக்கையை கழகச் செயலாளரும் வரவுசெலவு கணக்கை பொருளாளரும் வாசித்ததும் தலைமை உரைக்குப் பின் நடைபெற்ற விவாதத்துக்கிடையில் பல தீர்மானங்கள் நிறைவேறின முடிவில் அடியிற் கண்ட செயற்குழுவினர் இடைக்காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் தோழர்கள் ம. முத்து அ. மா. பெரியசாமி முறையே பொருளாளராகவும் செயலாளராகவும் மற்றும் தோழர்கள் வ. சுப்ரமணி, இரெ. வெங்கடசாமி; பி. ராமமூர்த்தி; மு. வடிவேல் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகச் செயலாளரின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது 6 மணிக்கு முடிந்தது.

* * *

பகுத்தறிவுப் படிப்பகம்

ஒண்டிப்புதூர், ஜன. 5—

1—1—50 ஒண்டிப்புதூரில் தோழர் செ. செயராமன் அவர்கள் இல்லத்தில் பகுத்தறிவுப்படிப்பகம் என்று ஒன்று திறக்கப்பட்டது அதற்கு தோழர் ம. பொன்னுசாமி தலைமை வகித்தார். பகுத்தறிவுப் படிப்பகத்தைப்பற்றியும். திராவிட முன்னேற்றக்கழகத்தை பற்றியும் தோழர்கள் செ. செயராமன் க. தேவராசு, மற்றும் பலர் பேசிய பின் தலைவர் நன்றி கூற கூட்டம் 9 மணிக்குக் கலைந்தது.

* * *

விவசாயிகள் சங்கம்

29—12—49 சேலம் ஜில்லா விவசாயிகள் சங்கத்தலைவர் ராவ்பகதூர் துரைசாமி அவர்கள் தலைமையில் தருமபுரியில், தருமபுரி டிவிஷன் விவசாயிகள் கூடி: பி ஆர். ராஜகோபாலனூர் (ஜில்லா போர்டு உறுப்பினர்) அவர்களைத் தலைவராகவும், பி. அப்பாவு (தருமபுரி பஞ்சாயத்து போர்டு தலைவர் அண்டு கே. ஆர். எம். எஸ். பஸ் உரிமையாளர்) அவர்களை துணைத் தலைவராகவும், எம். சுந்தரசாமி (ஜில்லா போர்டு மெம்பர் அண்டு சேலம் மத்திய பாங்கு அக்ராசினர்) அவர்களைச் செயலாளராகவும், மற்றும் பிரபல விவசாயிகள் பன்னிருவரை செயற்குழு அங்கத்தினர்களாகவும், கொண்ட, தருமபுரி தாலூகா விவசாயிகள் சங்கம் நிறுவப்பட்டது.

சேலம் ஜில்லா விவசாயிகள் மகாநாட்டை, ராசிபுரத்தில் ஏற்கனவே ராசிபுரத்தவர்கள் ஏற்பாடு செய்தபடி தமிழ்த் திருநாளுடன் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அரூர் தாலூகா விவசாயிகள் சங்கமும் அன்றே நிறுவப்பட்டது.

* * *

சென்னை சித்தவைத்திய சங்கம்

சென்னை, ஜன. 5—

சென்னை சித்த வைத்திய சங்கத்தின் 7-ஆம் ஆண்டு நிறைவு விழா, 2-12-49 அன்று குயப்பேட்டை ஆண்பள்ளியில் திருவாளர் மாஜி மேயர் என். இராமசாமி நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான வைத்தியர்கள் வந்திருந்தனர். அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

* * *

திராவிட முன்னேற்ற வாலிபர் கழகம்

பொள்ளாச்சி, ஜன. 4

நெகமம் தி. மு. வாலிபர் கழகச் செயற்குழு செயலாளர் தோழர் அ. ச. பாலு தலைமையில் 31-12-49 ல் கூடியது. அதுபோது நகரில் நீண்டநாளாய கழக அனுதாபியான தோழர் கோ. திருமலைசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் திரு மாணிக்கம் அம்மையார் 19-11-49-ல் இயற்கை எய்தியது குறித்து வருந்தி அன்னார் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்வதாகவும். ஜனவரி மாத இறுதிக்குள் தோழியர் சத்தியவாணிமுத்து. தோழர் ஈ. வி. கே. சம்பத் ஆகியோரை அழைத்து ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும்.

பொங்கல் விழாவையொட்டி 15-1-50 ல் வித்துக் கழகக் கட்டிடத்தில், சொற்பொழிவு, இசை, சித்திரப் போட்டிகள் நடத்தித் தேர்ச்சி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கி பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும். அதற்கானவை செய்ய செயலாளருக்கு அதிகாரமளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டு நன்றி கூறலுடன் செயற்குழு இனிது கலைந்தது.

* * *

சொற்பயிற்சி

பொள்ளாச்சி 31—12—49 ஞாயிறன்று இரவு 9-30 மணி அளவில் தி. மு. வாலிபர் கழகக் கட்டிடத்தில் கழகத்தின் பயிற்சியாளர் தோழர் கோ. சோமன் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டு தோழர் அ. ச. பாலு தலைமையில் சொற்பொழிவுப் பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. அதசமயம் செயற்குழு உறுப்பினர்களான, தோழர்கள் க. சின்னத்துரை, ச. சுப்பசாமி பொ. ச. உமேசன், ச. பழனிச்சாமி காசிமுத்து முதலியோர் 'பொங்கல் விழா" "நமது லட்சியம்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப் பின், துணைச் செயலாளர் தோழர் க. சின்னத்துரை நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

* * *

சமூக சீர்திருத்த வாசகசாலை

திலக்கோட்டை, ஜன 6—

27—12—49 அன்று மாலை 7 மணிக்கு சிறுமப் பொதுக் கூட்டம் தோழர் ஆர்: பெத்தண்ணய்யம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது அப்போது தோழர் என் பி. முத்திருளாண்டி அவர்கள் வாசகசாலையைத் திறந்து வைத்து உணவுப் பொருள் அதிகம் உற்பத்திச் செய்ய வேண்டிய அவசியத்தை விளக்கிப் பேசினார்; பின்பு தோழர்கள் ஆர். பொன்னுச்சாமி, எஸ் முக்கையா கக்கன் அய்யணர் முதலியவர்கள் குடிசைத்தொழில் அவசியம் என்பதைப்பற்றி பேசினர். பின் தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

* * *

அழகிரிசாமி ஞாபகார்த்த முன்னேற்றக்கழகம்

தூத்துக்குடி, ஜன 5—

தூத்துக்குடி சே. வி. அழகிரிசாமி ஞாபகார்த்த மு. கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம் 18—12—49 ஞாயிறு பிற்பகல் 1 மணிக்குக் கூடி கீழ்க்கண்ட முடிவுகள் எற்பட்டன.

செயலாளர் திரு விபோடாஸ் அவர்களது ராஜினாமா கடிதம் தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் காரணமாகவே வரவும், அது கழக நிர்வாக உறுப்பினர்களால் வருத்தத்துடன் ஏற்று கொள்ளப்பட்டு பின் ஏகமனதாக நியமிக்கப்பட்ட பிரகாரம், திரு விபோடாஸ் அவர்களால் பிரேரேபிக்கப்பட்ட கீழ்க்கண்டவர்கள் நிர்வாகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— எஸ். பி. சாமி துணைச்செயலாளர்:— டி. ஜோசப் நிர்வாக உறுப்பினர்:— கே. பொன்னன் மறைந்த மாவீரர் கே. வி. அழகிரிசாமி அவர்களது நாபகமாக இப்பொழுது கைவெய்தியமைக்கு இக்கூட்டம் வருந்துவதுடன், அன்னாருடைய குடும்பத்தினருக்கும் தங்களது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது, எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு பின் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

ஆவடித் தொழிலாளர் கூட்டம்

சென்னை, ஜன. 5—

கடந்த 27-12-49 அன்று இ எஸ். டி. ஆவடியில் ஓர்பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. கே. ஜ ஜ தலைமையில் தோழர்கள் சீனிவாசன், ஆர். ஜெயநாராயணன் சொற்பொழிவாற்றினர்கள். தலைமையுரையில் தலைவர் ஆட்சியாளர்கள் அமுல் நடத்தப்போகும் பெரிய ஆள் குறைப்புத் திட்டத்தைக் கண்டித்துப் பேசினார்; திட்டம் கைவிடப்பட வேண்டிய நியாயமான காரணங்களை அழகாக எடுத்துச் சொன்னார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது:-

தன்மையில் நடக்கவிருக்கும் ஆள் குறைப்பு திட்டத்தைப்பற்றி மத்திய சர்க்கார் மந்திரி கலைவரைவிடம் சங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதால், ஆலைவந்தார்களிடமிருந்து தகுந்த பதில் கிடைக்கும் வரையில் சென்னையிலுள்ள சி. ஆர். ஐ. இ. அவர்களை ஆட்குறைப்புத் திட்டத்தைச் சிறிது தாமதம் செய்ய வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது

அன்று மாலை 5 மணிக்குச் சிறிதும் எதிர்பாராத விதமாக டில்லியிலிருந்து வருகைபுரிந்த திரு ஜாபீர்சர் இ. எம். சி. அவர்களை சங்கத்தின் சார்பில் இரண்டு பிரதிநிதிகள் பேட்டி கண்டு மூலாதாரப் பிரச்சினைகளைப்பற்றியும், தங்கள் குறைகளை எடுத்துக் கூறினர். அவர்கள் சந்திக்கேற்றவாறு உதவி புரியலாய் இ. எம். சி. வாக்களித்தார் சென்னை சி. ஆர். ஐ. இ. யும், ஓ. சி. இ. எஸ். டி. யும் உடனிருந்தனர்.

விசாகை கடற்படைப் பயிற்சி நிலயம் பற்றிய தகவல்கள்

புதுடில்லி, டிச. 29—

விசாகப்பட்டினத்தில் அமைக்கப்பட்டுள்ள ராயல் இந்தியக் கடற்படை சிறுவர்கள் பயிற்சி நிலயம் தனிச் சிறப்பு வாய்ந்ததொரு ஸ்தாபனமாகும். இந்தியாவின் வருங்கால மாலுமிகளை இந்த ஸ்தாபனம் உருவாக்கிவருகிறது. இந்தியக் கடற்படைக்குத் திரட்டப்படும் சிறுவர்கள் படைக்கு ஆள் திரட்டும் காரியாலயத்திலிருந்து நேராக இந்த இடத்துக்கு வந்து சேருகின்றனர்: விசாகையிலுள்ள பிரதான பயிற்சி ஸ்தலத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய நுழைவு முகாமில் இவர்கள் முதலில் வரவேற்கப்படுகின்றனர். இந்த முகாமில் வைத்தியப் பரிசோதனை நடத்தப்பட்டு, உத்தியோக நம்பர்கள் கொடுக்கப்படுகின்றனர். ராணுவ உடைகள்; படுக்கைகள், அன்றாட உபயோகத்துக்கு வேண்டிய மெ பாத்திரங்கள் ஆகியவையும் இங்கு இவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அதன் பிறகு, பயிற்சிப் பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர்கள் இந்த முகாமில் தங்கியிருக்கும் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர்கள் இந்த முகாமில் தங்கியிருக்கும் சமார் 12 வார காலத்துக்கும் இந்த அதிகாரியே இச்சிறுவர்களின் "வழி காட்டியாக வும், நண்பராகவும், ஆசிரியராகவும் இருந்துவருவார். இப் பயிற்சி ஸ்தலத்தில் மொத்தம் நான்கு பயிற்சிப் பிரிவுகள் உள்ளன. இவற்றிற்கு முறையே அசோ அர்ஜுன், அக்பர். அசோக் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்நான்கு பெயர்களும் 'அ' சரத்தையே முதலெழுத்தாகக் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

ரயில்வே பழக்கவழக்கங்களையும், கப்பல்கள் பற்றிய அடிப்படையான விஷயங்களையும் முதலில் கற்றுக்கொள்ளப்படுகிறது இந்த முகாமின் முக்கிய நோக்கமாகும். இவற்றுடன், கணிதம், சரித்திரம், பூகோளம் போன்ற பள்ளிக்கூடப் பாடங்களிலும் இங்கு இவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. உடற்பயிற்சியும் வெளி வேலைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. முகாமைச் சேர்ந்த வைத்திய அதிகாரி, உடல் சுகாதாரம் முதலிய விஷயங்கள் பற்றிப் பிரசங்கங்களும் நிகழ்த்துவார். இந்தப் பயிற்சி முடிந்ததும் சிறுவர்கள் பத்து பேர்கள் கொண்ட கோஷ்டிகளாகப் பிரித்து அப்பிரிக்கப்படுகின்றனர். அந்தப் பிரிவை முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு ஸ்டோர்கள், செய்தி போக்குவரத்து இப்பந்திகள் குமாஸ்தாக்கள் போன்ற கடற்படையின் பல்வேறு பிரிவுகளுக்கும் இவர்கள் பிரித்தனுப்பப்படுகின்றனர் இவ்விதமாக இவர்கள் இந்த முகாமிலிருந்து வெளியேறும்போது, கடற்படை சூழ்நிலையில் பழகிப்போய், பிரதான பயிற்சி ஸ்தலத்தில் முறையான பயிற்சி பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆகிவிடுகின்றனர்.

பிரதான பயிற்சி ஸ்தலத்திலும் இவர்களுடைய வாழ்க்கை நுழைவு முகாமில் இருந்த மாதிரியேதான் இருக்கும். ஆனால், இங்கு போதிக்கப்படும் பாடங்களும், அளிக்கப்படும் பயிற்சியும் சற்றுக் கடினமாக இருக்கும். எல்லாச் சிறுவர்களுக்கும் பள்ளிக்கூடப் பாடங்களும், துப்பாக்கிப் பயிற்சியும், மாலுமிப் பயிற்சி தேகப்பியாசம் ஆகியவை கட்டாய பாடங்களாகப் போதிக்கப்படுகின்றன. வாரத்தில் பாதி நாள் இந்தப் பயிற்சிகளில் கழிந்துவிடும். பாக்கியுள்ள நாட்களில், செய்திப் போக்குவரத்து மாலுமிப் பயிற்சி முதலிய துறைகளில் விசேஷப்பயிற்சி அளிக்கப்படும். மொத்தம் 60 வார காலம் இப்பயிற்சிகள் அளிக்கப்படும்.

எட்டாவது வாரத்தில் ஒரு பரீட்சை நடத்தப்படுகிறது: இந்தப் பரீட்சையின் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு பையன்கள் அவரவர் திறமைக்கேற்ற பல்வேறு பிரிவுகளுக்கும் மாற்றப்படுகின்றனர். இது இறுதியான பரீட்சை அல்ல. பையன்கள் அவரவருக்குத் தகுதியான துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றனரா என்பதை மீண்டுமொருமுறை சரிபார்த்து, தவறுகள் தெரிந்திருந்தால் அவற்றை ஒழுங்கு படுத்தும் பொருட்டே இப்பரீட்சை நடத்தப்படுகிறது. ஒரு சிறுவன் தகுதியற்றவனென்றோ விரும்பத்தகாதவன் என்றோ கருதப்பட்டால் பயிற்சியின் எந்தக் கட்டத்திலும் அவனை வீட்டுக்கனுப்பிவிடலாம். ஆனால், இறுதித்தேர்வு, 23-வது வாரத்திலோ அல்லது மூன்றிலோ நடத்தப் படுவது வழக்கமாக இருந்துவருகிறது பையன்கள் ஆரம்பத்தில் தெரிந்தெடுக்கப்படும் போதே அதிகவனம் செலுத்தப் படுவதால், இறுதியாக வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் அல்லது கீழ்வகுப்புக்குத் திருப்பி அனுப்பப்படும் பையன்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருக்காம்.

ஒரு மாலுமியைத் தயார் செய்வதில் தரைப்பயிற்சி மிக அவசியமென்றாலும், மொத்தப் பயிற்சியில் அது ஒரு அம்சமேயாகும். ஏனெனில் மாலுமியின் உண்மையான வேலை கடலில்தான் இருக்கிறது. ஆனதால், பயிற்சிக்காக அமைக்கப்பட்டிருக்கும் எச். எம். ஐ. எஸ். ராஜபுதனம் என்ற கப்பலில் இவர்களுக்குக் கடற்பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப்பயிற்சி முடிந்ததும் எச். எம். ஐ. எஸ். டிர் என்ற கப்பலில் 15 வார காலம் அனுபவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் சிலர் ஸ்வார்டனுக்கு அனுப்பப்படுவேர்கள்.

விசாகை பயிற்சி ஸ்தலத்தில் துப்பாக்கிப் பயிற்சி மின்சாரவேலை, என்ஜின் வேலை, செய்திப்போக்குவரத்து ஆகிய துறைகளில் விசேஷ பயிற்சியளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவும் ஒரு அதிகாரியின் மேற்பார்வையில் இருந்து வருகிறது. எல்லாப் பிரிவுகளும் பயிற்சி ஸ்தலத்தின் கடற்படைத் தலைமை அதிகாரியின் அதிகாரத்துக்குட்பட்டு வேலை செய்துவரும். இந்தப் பயிற்சி ஸ்தலத்திற்கு எம். எச். ஐ. எஸ். சிர்கார் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. விசாகையிலுள்ள பயிற்சி சிப்பந்திகள் தவிர, கடற்படை தனி சிப்பந்திகள் சிலரும் இங்கு இருக்கின்றனர். தலைமை வைத்திய அதிகாரியொருவரும், சப்ளை அதிகாரியொருவரும் இருக்கின்றனர். க்ஷேமாபிவிருத்தி அதிகாரியும், கேளிக்கை அதிகாரியொருவரும் இருக்கின்றனர்.

இவ்வாறாக, விசாகையில் ஒரு முதல்தரமான பொதுமக்கள் பள்ளிக்கூடமே நடத்தப்பட்டு வருகிறது. கல்விமான்களைத் தயாரிப்பது இதன் நோக்கமல்ல. ஆனால், நாட்டிற்கு கல்விமான்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாயிருக்கும் மாலுமிகளைத் தயார் செய்வதையே இந்த ஸ்தாபனம் தனது லட்சியமாகக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் சிறுவர்கள் இந்த ஸ்தாபனத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பசப்போ, வேலைத் திறமையோ சிறிதும் இல்லாத சிறுவர்களை, தேக வலிமையும், கட்டுப்பாடான வாழ்க்கையும், உன்னதமான சேவையில் உறுதியான நம்பிக்கையும் கொண்ட உற்சாக முள்ள மாலுமிகளாகவும் வீரர்களாகவும் இந்த ஸ்தாபனம் உருவாக்கிவருகிறது இது ஒரு மகத்தான சாதனையேயாகும் ஆனால் இதைப் பற்றிப் படித்தால் மாத்திரம் போதாது. நேரில் வந்து பார்க்கவும் வேண்டும். மாலுமிகளுக்கான பள்ளிக்கூடத்தை நேரில் பார்க்க விரும்புபவர்கள் பயிற்சி ஸ்தலமை அதிகாரிக்குத் தெரியப் படுத்தினால் அவர்களை வரவேற்று உபசரிக்க அந்த அதிகாரி எப்பொழுதும் சித்தமாக இருக்கிறார்.

இந்தோனேஷியா - சிங்கப்பூர்விமானசர்வீஸ்

சிங்கப்பூர், ஜன 6—

இந்தோனேஷியாவுக்கும் சிங்கப்பூருக்குமிடையே விமான சர்வீஸ் நடத்த இந்தோனேஷ்ய ஏர்வேஸ் என்ற கம்பெனி ஆரம்பித்திருக்கிறது. இப்புது கம்பெனி யு எஸ். ஐ (இந்தோனேஷியா) கே. எல் எம். (டச்சு) இவைகளால் நியமிக்கப்படும் டைரக்டர்களால் நடத்தப்படும். கே. எல். எம். கம்பெனியுடன் 10 ஆண்டு ஒப்பந்தம் இருப்பதாலேயே இந்த ஏற்பாடு இக்கம்பெனியின் விமானங்கள் முதன் முதலாக சிங்கப்பூருக்கு இவ்வாரத்தில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

முன்னாள் ஜெக் மந்திரியும், தேசியமய திட்டத்திற்குக் கர்த்தாவுமான லாஸ்மன் அமெரிக்க ஜெர்மனியில் தஞ்சம் புகுந்திருக்கிறார்.

* * *

'இதாலியாயிக் ஹார்ட்' என்றழைக்கப்படும் ஸால்வடோர் கிலிமாறு விலியிலிருந்து விரட்டப்பட்டார் என்று சொல்லப்பட்டாலும், அவர் இன்னும் விலியிலேயே இருக்கிறார் என்று மிலன் பத்திரிகைகளிலிருந்து தெரிய வருகிறது.

* * *

பாகிஸ்தானில், பிலிப்பைன் டிராசன்லரிக ஸினர் டி. கா விய நியமிக்கப்பட்டிருக்கிறார்

மாறுதல்கள் நேர்ந்துவரும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லெழுத்து. அது கிரந்த லிபியில் பொறிக்கப்பட்ட வட்டெழுத்துச் சாசனம். இன்னொன்று அதற்கடுத்த மேல்பக்கமுள்ள மண்டபத்தில் பொறிக்கப்பட்டிருப்பது. அது ஓர் தெலுங்குச் சாசனம். இங்க இரு கல்வெட்டுகளை பற்றிய விபரங்களும் இதுகாறும் வெளிவரவில்லை.

முதல் ராஜராஜ சோழனுடையதுதான் இங்குள்ள கல்வெட்டுக்களில் மிகப்பழமையானது. ராஜேந்திரசோழன், ராஜாதிராஜன் முதலியோருடைய கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. வீரராஜேந்திரனுடைய நீண்ட சாசனமொன்று மணிமண்டபத்திலுள்ள கல்தூண்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. அது கெட்டுப்போகாமலிருப்பதற்காகப் பித்தளைத் தகட்டினால் பொதியப்பட்டிருப்பதை இப்பொழுதும் பார்க்கலாம்.

பராந்தக பாண்டியன், குலசேகரபாண்டியன் முதலான பாண்டிய மன்னர்கள் பலருடைய சாசனங்களும் இங்கே காணப்படுகின்றன. நாயக்க அரசர், சேர அரசர் என்பவர்களுடைய கல்லெழுத்துக்களும் சில உண்டு.

மேற் குறித்த பராந்தக பாண்டியனுடைய கல்வெட்டு இங்குக் கன்னியாகுமரி ஆலயத்தைத் தவிர, வேறெந்த இடத்திலும் இருப்பதாக இதுவரையிலும் கண்டறியப்படவில்லை. இதன் காலம் ஏறக்குறைய 850 ஆண்டுகளுக்கு முன்னாம். இக்கல்வெட்டில் 'தென்னவர்தம் குலதெய்வம்' என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. பாண்டிய மன்னனுக்குக் 'குமரிச்சேர்ப்பன்' என்பது ஒரு பெயர்.

'பொதியப் பொருப்பன் புனல் வையைத் துறைவன் குமரிச்சேர்ப்பன் கோப்பாண்டியனே' என்பது செந்தன் திவாகரச் சூத்திரம். இத்திவாகரம் தமிழ் நிகண்டுகளுள் மிகப் பழமையானது. இதன் காலம் கி. பி. எட்டாவது நூற்றாண்டின் நடுப்பகுதி யென்பது அறிஞர்களின் ஆராய்ச்சி முடிபு.

மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுகளாலும், தென்திருவிதாங்கோட்டில் வேறு பல பாகங்களில் காணப்படும் கல்வெட்டுக்களாலும், விளவங்கோட்டுத் தாலூகாவிலுள்ள மூன்சிறைப் பார்த்திபசேகரபுரம் செப்பேடுகளாலும் தென்திருவிதாங்கோடு ஓர் செந்தமிழ் நாடே என்பதும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே ஏன்?—சரித்திர காலத்துக்கு முன்னிருந்தே தமிழர்கள் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதும் பிறவும் தெள்ளத்தெளிய அறியக் கூடியவையாம். இலக்கியங்களும் வரலாறுகளும், சாசனங்களும், ஆலயங்களும், பழக்கவழக்கங்களும் இந்நாட்டவர் தமிழர்களென்று காட்டுவதைத் தவிர வேறெதற்கும் ஆதரவளித்து நிற்பதாய் நாமறிந்தவரையில் சொல்வதற்கில்லை.

உண்மை இவ்வாறிருந்தும், ஒரு மேதாவி திருவிதாங்கோட்டிலுள்ள தமிழர்கள் இடைக்காலத்தில் தோட்ட வேலைக்காக வந்த கூலியாட்கள் என்று பிதற்றியிருக்கிறார்கள். இப்பிதற்றலுக்கு காரணம் அவருடைய அகங்காரக்காய்ச்சலோ, அறியாமையோ யாதோ யான் அறியேன். உண்மையைச் சொல்கிறேன் கேளப்பா, கேளப்பா என்றால் கேட்பதுமில்லை; ஆதாரங்களை எடுத்துக்காட்டிப் பாரப்பா என்றால் பார்ப்பதுமில்லை. பெருமையும் பேராசையும் தான் கண்ணையும் காதையும் நன்கு மறைத்து விட்டனவே! இவர்களோடு எப்படி வழக்காடுவது?

இந்நாடு முழுமையும் தம்முடையதென்பதற்கு மலையாள நண்பர்களும் சில ஆதாரங்கள் காட்டுகிறார்கள். அவர்கள் காட்டும் ஒரு ஆதாரம்—கேரளோற்பத்தி கேரள மகாத்மியம் என்னும் நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு பாட்டிக் கதை. பரசுராமர் கோகர்ணத்திலிருந்து மழுவை எறிந்து கன்னியாகுமரியில் வீழ்த்தி 160 யோசனை தூரம் கடலை விலக்கிப் பிராமணர்களுக்குத் தானம் செய்த கதை அது. திரேதாயுகத்தில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் இந்தக் கதை கலியுகத்தில்—அதுவும் அனுமகொண்டு சகாப்தத்தில் சரித்திரப் பிரமாணமாக முன்னிறுத்தப்படுகிறது. இந்தப் பிரமாண நூல்களைப் படித்துவிட்டு 'மலபார் அண்ட் அஞ்சங்கோ' என்ற நூல் எழுதிய இருவோகன் என்பார், அவை பொருளற்ற புராண புளுகுகள் என்றார். இப்படியிருந்தும் இந்த நூல்களின் புனிதத் தன்மையை எடுத்து விளம்பரப்படுத்தும் பெரியோர்களின் நேர்மையை நீங்களே மதிப்பிட்டுக்கொள்ளுங்கள். இந்தக் கதையை நம்புகின்ற மலையாள அன்பர்கள் பரசுராமர் பிராமணருக்குத் தானங்கொடுத்த பகுதியை மட்டும் நம்பாதிருக்கலாமா? அப்படியானால் அந்தணர்களுக்கு நாட்டை பரித்து அவரடிக்கீழ் நின்று வாழ இன்று அவர்கள் ஒப்புக்கொள்வார்களா?

இதுவோர் புரட்சிக்காலம். சிறிது காலத்துக்குள் எத்தனையெத்தனை மாறுதல்களைக் கண்ணால் பார்த்துவிட்டோம்! பாகிஸ்தான் ஏற்பட்டுத் தனி நாடாகப்பிரிந்து போனதைப் பார்க்கவில்லையா? மகுடங்களெல்லாம் தகர்ந்து மறைந்து போனதைப் பார்க்கவில்லையா? பன்னூறாண்டுகளாகச் சேர்ந்திருந்த நாடுகள் பிரிகின்றன. பிரிந்த நாடுகள் சேர்கின்றன. முடியாட்சி நீங்கிக் குடியாட்சி ஓங்கும் இக்காலத்தில் மக்கள் சாதி சமய வேறுபாடுகளை ஒழித்து, மொழியால் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வகையேற்படுவது இன்றியமையாதது. அதற்காகவே தெலுங்கர்கள் ஆந்திர மாகாணம் கோருகிறார்கள். கன்னடர்களும் பிரிந்துபோகவிரும்புகிறார்கள் கேரளியர்களும் தனி மாகாணத்துக்கு அரும்பாடுபடுகிறார்கள். இவ்வேளையில் தென்திருவிதாங்கோட்டிலும், செங்கோட்டையிலும், தேவிகுளத்திலும், பீருமேட்டிலும் வாழும் தமிழர்கள் தங்களிடங்களையும் தாய்த்தமிழ்நாட்டுடு சேர்க்க வேண்டுமென்று கேட்பதில் குற்றமென்ன இருக்கிறது? பிரித்துவிடமாட்டோமென்று கேரளீயர் சொல்வதில் யாதொரு பொருளுமில்லை. இவர்கள் தங்களுடைய நன்மையைக் கருதிச் சொல்கின்றார்களா? தமிழர்களுடைய நன்மையைக் கருதிச் சொல்கின்றார்களா? என்று சிந்திக்கவேண்டும். தங்கள் நன்மையைக் கருதி என்றால் அது காலமறியாத பேச்சு; தமிழர்களை என்றென்றும் தம் கீழ் அடிமைகளாக வைத்து நன்மை பெறலாமென்றவிருப்பத்தை அகலாமல் தமிழர்களின் நன்மையைக் கருதியே சொல்கிறார்களென்றால் அது, ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தியழுதவனையே ஒக்கும். இந்தப் பேச்சை எவரும் நம்பமாட்டார்கள். திருவிதாங்கோட்டுத் தமிழ்நாடின்றிக் கேரள மாகாணம் அமைக்க முடியாதென்றால், அவர்கள் தனி மாகாணக் கோரிக்கையை அடியோடு விட்டுவிடட்டுமே! தமக்குத் தனி மாகாணம் வேண்டுமென்பதற்காக லட்சோபலட்சம் தமிழர்களின் நலன்களைப் பலியிட நினைப்பது நீதியா? முறையா? தர்மமா?

எங்கெங்கு மொழியாளர்கள் அண்டையிலுள்ள தம் தாய்மொழிப் பகுதியோடு சேர விரும்பினாலும், அவர்களைப் பிரித்துச் சேர்த்து ஒற்றுமையாய் வாழத் துணை செய்வதுதான் பொது நோக்கங்கொண்ட சிறந்த அரசியல் தலைவர்களின் கடமையாகும். இதற்காகச் சரித்திரமும் புராணமும், சாசனமும், இலக்கியமும் புரட்டிப்பார்க்க வேண்டிய தேவையேயில்லை. கண்முன்னே காணும் உண்மையை நிரூபிக்க ஆதாரம் தேடவேண்டிய அவசியமுண்டா? இமயமலையில் சேர சோழ பாண்டியர்களின் வில்லும் புலியும், கயலும் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தமிழ் நூல்களில் கூறுகின்றனவை எடுத்துக்காட்டி இமயம் வரையும் தமிழர்க்குரிய பகுதியென்று தமிழர்கள் சொன்னால், சிரிக்கமாட்டார்களா இந்தக் காலத்தில்?

சில அரசியல் நிபுணர்கள் நாடுகளைப் பிரிக்கவோ சேர்க்கவோ வேண்டுமென்றால், பொருத்தம் பார்க்கத் தொடங்கி விடுகிறார்கள். மக்களின் விருப்பத்தை மட்டும் கவனித்தால் போதாதாம். சரித்திரப் பொருத்தம், பூமி நூல் பொருத்தம், பொருளாதாரப் பொருத்தம் கலாசாரப் பொருத்தம், மொழிப்பொருத்தம், மனப்பொருத்தம் முதலிய பொருத்தங்கள் ஒத்துவர வேண்டுமாம். இதில் ஓரளவு உண்மையில்லாமலில்லை. ஆனால் இன்று உருவாகியிருக்கும் சமஸ்தான யூனியன்கள் எதிலாவது மேற்கூறிய பொருத்தங்கள் அனைத்தும் ஒத்து வந்திருப்பதுண்டா?

திருமணத்துக்குச் சோதிடர்கள் பொருத்தம் பார்ப்பதுண்டு. நட்சத்திரப் பொருத்தம், கணப்பொருத்தம், மகேந்திரப் பொருத்தம், ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம், யோனிப் பொருத்தம் இராசிப்பொருத்தம், வசியப் பொருத்தம், வேதைப் பொருத்தம், சரட்டுப் பொருத்தம் என்று பத்துப் பொருத்தம் சொல்வார்கள். இந்தப் பத்துப் பொருத்தங்களும் ஒத்து இணைந்த மக்கள் ஆயிரவரில் எத்தனை பேர் இருக்க முடியும்? மனப்பொருத்தம் ஒன்று தான் வேண்டியது. மனப்பொருத்தமில்லாமல் மற்றப் பொருத்தங்கள் எல்லாமிருந்தும் பயனில்லை. மனப் பொருத்தமிருந்து மற்றப் பொருத்தங்களில்லாமற் போனாலும் பாதகமில்லை இதை உலகில் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆதலால் சோதிடர்கள் பொருத்தங்கள் கூறிச் செய்துவிடுவதை காட்டும் முறையைத் தாமும் கையாளாமல் அரசியல் தலைவர்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டுமென்பது என் ஆசை.

திருவிதாங்கோட்டுத் தமிழர்கள் அண்டையிலிருக்கும் தாய்த் தமிழகத்தோடிணைய விரும்புகின்றார்கள். தமிழ்நாட்டாரும் இவர்களைச் சேர்த்துக் கொள்ள ஆசைப்படுகின்றனர். இந்நிலையில் இவ்விருசாராரையும் இணைத்து வைப்பதென்றே ஆளும் அதிகாரிகளின் கடமை. கேரளீயர் இதில் தலையிட்டுக் கலக்க முயல்வது ஒரு சிறிதும் நியாயமாகாது.

பிரிவினைக்கேற்ற காலம் இதுவல்ல; அதற்கு அமைதியான சூழ்நிலைவேண்டுமென்று பெரிய அரசியல் தலைவர்கள் சொல்லுகிறார்கள். உலகப் போக்கை உற்றுப் பார்த்தால், அமைதி அண்மையிலிருப்பதாகத் தெரியவில்லை. உலகில் என்றும் கொந்தளிப்பும் குமுறலும் இருந்துகொண்டுதானிருக்கும். அந்த உலகச் சுழற்சிக்கள் அகப்பட்டுக்கிடக்கும் நம்பாரத தேசம் போன்ற ஒரு பெரிய தேசத்திலும் அதனைய சில்லரைச் சண்டைகளும் சச்சரவுகளும் குழப்பங்களும் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும். அவை நீங்கியபின்பிரிக்கவோ சேர்க்கவோ செய்யலாமென்பது திரை நீங்கித் தீர்த்தமாடலாமென்று செல்வதற்குச் சமானமே தவிர வேறல்ல.

நான்கு சகோதரர்களுள்ள ஒரு குடும்பத்தில் சொத்துப் பிரிவினை நடைபெறுகின்றதென்று வைத்துக்கொள்வோம், சொத்தினை ஒரே சமயத்தில் நால்வர்க்கும் பிரித்துக் கொடுப்பதுதான் முறை; சௌகரியமும் அதுதான். ஒவ்வொருவருக்காகப் பிரித்துக்கொடுக்கத் துணியும் போது, ஒரு முறைக்குமூன்று முறை சண்டையும் குழப்பமும் அநுபவிக்க நேரும்.

இங்கும் அக்கறையில்லாமல் ஒரு [illegible] ஏககாலத்தில் தென்னாட்டு மொழிவாரி மாகாணங்கள் நான்கையும் அமைத்துவிடுவதுதான் நலமென்று கருதுகிறேன். இந்த எண்ணம் நம் பேரிடத்தாருக்கு உண்டாகாமலிருப்பது நம் கஷ்டகாலம் என்றுதான் சொல்லவேண்டும்.

இப்பொழுது நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம், நம் நாடு குடியரசு நாடாகப்போகிறது, இனி வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமையுண்டு. வாக்குரிமையுடைய ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மன்னனாகின்றான். ஆதலால் அவன் அபிப்பிராயத்துக்கு விலையுண்டு மதிப்புண்டு; அவ்வபிப்பிராயங்கள் ஒரு முகப்படாது பல்வேறு வகையாகப் பிளவுபடும்போது பெரும்பான்மை, சிறுபான்மை முறை கையாள வேண்டியதாகின்றது. இது ஜனநாயகத்துக்கு உகந்த நல்ல முறைதான்; ஆனால், அதிகாரத்துக்கு வந்த பெரும்பான்மைக் கட்சியினர் சிறுபான்மையோரின் நலத்துக்கு ஊறு செய்து, அவர்களுக்குரல் வெளிக் கிளம்ப வொட்டாமல் தடுத்து அவர்களை, அடக்கி ஒடுக்கி மிதித்து வைப்பதற்கும் இது உதவக் கூடும். பெரும்பான்மையினர் எனப்படுவோர் இந்த வகைக்கு தம் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. அது பெரும்பாதகமானது; ஆபத்தானதுங்கூட. ஆகலால் ஆட்சியாளர்கள் சிறுபான்மையோர் பெரும்பான்மையோர் என்னும் பேதமின்றி யாவர்க்கும் ஒத்த நீதி வழங்கி, மனக்கசப்பைப் போக்கி, வளமுள்ள பலமாகாணங்களை அமைப்பார்களாக.

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

8-1-50

புளியந்தோப்பு (சென்னை) :—		இரா. நெடுஞ்செழியன்
திருச்சி :—	(காலை)	சி. என். அண்ணாத்துரை. என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன்
காரைக்குடி :—	(மாலை)	சி. என். அண்ணாத்துரை என். வி. நடராசன், பி. பழனிச்சாமி
கீழத்தாயில்பட்டி :—		எம். எஸ். சிவசாமி இரா. சு. தங்கப்பழம் விருதை. எம். இளஞ்செழியன்
தொண்டயம்பட்டி :—		மதுரை மன்னன், எம். எஸ். ராமசாமி, எஸ். முத்து, எம். அய்யாசாமி
புள்ளிக்கோட்டை :—		வெ கி சம்பத், வி. எஸ். கோனயன், ஜி. என். இராசு எஸ். அப்பாவு

9-1-50

தவுட்டுப்பாளையம் :—		சி. என். அண்ணாத்துரை, ஜி. நாகராசம்

10-1-50

பொத்தனூர்.—	(காலை)	சி. என். அண்ணாதுரை, ஏ. சித்தையன், பி. பழனிச்சாமி.

மதிப்புரை

சுடாத நெருப்பு

[ஆசிரியர்: ரவி; வெளியிட்டோர்; தமிழ்ப் பொழில் 31 சிம்மக்கல் தெரு. மதுரை விலை. ரூ. 1—4—0]

"சுடாத நெருப்பு" என்பது இந்நூல் 'ரவி' என்னும் புனைப் பெயரில் புகுந்துகொண்டு ஒரு உண்மையான 'கவி' ஆற்ற வேண்டிய அரும்பணியைச் செய்துவரும் தோழர் கு. நாகிவம் அவர்களின் இயற்றிய பல கவிதைகளின் தொகுப்பு நூலாகும். 'சுடாத நெருப்பு' என்பது அழகிய சிறிய கவிதை இந்நூல் இதனை தமிழ் காதல், சமூகம், கலை, தொழிலாளர் நிலை, பொது விஷயங்களை பற்றிய கவிதைகள் பலவும் சேர்க்கப்பட்டுள்ளன. கவிதைகள் ஒவ்வொன்றும் கருத்து ஆழமும், கற்பனைத் திறனும் கொண்டு திகழ்கின்றன. கவிதைகள் இனிமையாக மட்டுமின்றி எளிய நடையிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவை அனைத்துக்கும் எடுத்துக்காட்டாக "புலமை மிகு பூவுலகே!" என்னும் தலைப்பில் தீட்டப்பட்டிருக்கும் கவிதையைச் சொல்லலாம். அதில் தோழர் 'ரவி' புத்தரையும் சித்தர்களையும் ஒருவராக மக்கள் மனத்தின் முன் கொணர்ந்து நிறுத்திக் காட்டி மக்கள் அவர்களைப் பின் பற்றுமாறு உணர்த்துகிறார். புத்தரைச் சிறப்பிக்கும் வாழ்வைத் தவிர இப்பூவைப் 'புலமை மிகு பூவுலகை அறிஞர் கள் பலர் அழித்து விட நீ மட்டும் வாழ்கிறாயே' என்று உளம் நொந்து கேட்கிறார்.

தோழர் ரவியின் இந்நூலுக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களே மதிப்புரை தந்திருக்கும் போது இந்த நூலின் மாண்புக்கு வேறென்ன தேவை? எனவே நமது மதிப்புரையை இத்துடன் நிறுத்தி இதனைப் படித்துப் பார்க்குமாறு தமிழ் அன்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

* * *

"சிற்பி"

(டிசம்பர் இதழ்)

[ஆசிரியர் பி. ஏ. முகம்மது கமால் விலை அணா 2. கிடைக்குமிடம்; 188, [illegible] தெரு, சென்னை.]

இது ஒரு புத்தக வெளியீடு. சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், கதைகளும் ஒரு நாடகமும் இதில் இடம் பெற்றுள்ளன. புழுப்போன்று [illegible] பத்திரிகையுலகில் 'சிற்பி' சிறுகதைக் கருத்துக்களைத் தாங்கி அழகுற வெளிவந்துள்ளது கண்டு மகிழ்ச்சி! தமிழகம் 'சிற்பி'யையும் மூலை மலராகச் சிறப்பிக்க வேண்டுமென்று கூறுகிறோம்.

* * *

கணவன் மனைவியிடம் காதல் வாழ்வு உண்டா?

[ஆசிரியர்: [illegible]; வெளியிட்டோர்; [illegible] அண்டு கம்பெனி; 43 [illegible] செட்டித் தெரு; சென்னை-1 விலை அணா 3]

கணவன்—மனைவி ஆகிய இருவரிடையே அடிக்கடி சச்சரவு, குடும்ப வாழ்க்கையில் வெறுப்பு முதலியன ஏற்படுவது சகஜமாகிவிட்டது. இதற்குக் காரணம் காதல் மணம் நடவாமையே என்பதை ஆசிரியர் விளக்குகிறார். காதலுக்குப் புறம்பான மணம் தான் சமுதாய சீர்கேடுகளுக்கும் காரணம் என்கிறார் படித்துப்பாருங்கள்.

* * *

பெண்களை நம்பலாமா?

[ஆசிரியர்: "[illegible]" விலை அணா 4; கிடைக்குமிடம்:

இனி நடப்பவை

சென்னை:—சென்னைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் 8-1-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் சி. சிங்காரன் அவர்கள் "திருக்குறளும், [illegible]" என்பது பற்றிப் பேசுவார். இடம், புரசை வைகோத்தார் தெரு நகராண்மைக் கழகப் பள்ளி.

* * *

சென்னை:—[illegible] மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம், 8-1-50 ஞாயிறு காலை 9 மணிக்கு, வாத்தியார் கந்தப்பிள்ளை தெரு நகராண்மைக் கழகப் பள்ளியில் நடைபெறும். அதுபோது, புதிய ஆண்டுக்கு தேர்தல் நடைபெறும். உறுப்பினர்களனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

சேலம்:—அம்மாப்பேட்டை மேன்ஸ் தி. மு. க. கிளையின் [illegible] சொற்பயிற்சிக் கூட்டம் 8—1—50 ஞாயிறு இரவு 7 மணிக்கு கழக கூட்டத்தில் நடைபெறும். அதுபோது "இந்தி மொழி தமிழ் நாட்டுக்குத் தேவையா?" என்பது பற்றி பேசப்படும்.

* * *

கள்ளிக்கோட்டை:—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா, 8 1-50 ஞாயிறு மாலை 5 மணிக்கு டவுன் ஹாலில் நடைபெறும். தோழர் வி. எஸ். [illegible] (ஆசிரியர், 'மணபுரம் டைம்ஸ்') தலைமை வகிப்பார். தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ். அப்பாவு, ஜி. என். இராச ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஆஸ்டின் புதுமாடல் கார்கள்

லண்டன், ஜன. 5—

ஆஸ்டின் கம்பெனியார் பல நூதன என்ஜின் வசதிகளைக் கொண்ட புது மாடல் கார்களைத் தயாரித்திருக்கின்றனர் என்றும், இது சம்பந்தமான பரீட்சைகள் மிக ரகசியமாக நடத்தப்படுகின்றன என்றும் ஒரு [illegible] பாரிஸ் நிருபர் அறிவிக்கிறார்.

[illegible] புநூலகம், ஆபீசர் லேன் [illegible] ஜா. எ.]

பெண்ணினத்தைப் பேசென்றும், பிசாசென்றும் எழுதிவைத்த பழந்தாம்பசலிகளின் கருத்துக்களை உடைத்து, பெண்களின் பெருமையை எடுத்துக் காட்டுகிறார் இதன் ஆசிரியர். பெண் குலத்தைப்பற்றி பட்டினத்தார் கூறியுள்ள கருத்தையும், பாரதிதாசன் பாடல்களைக் கொண்டு கருத்தையும் ஒப்பிட்டுக் காட்டப் பட்டுள்ளது இந்நூலில் கவர்ச்சியூட்டக் கூடிய நல்ல நடையில் எழுதப் பட்டுள்ளது. பல அறிஞர்களின் மேற்கோள்களுடன் தீட்டப்பட்டுள்ள இந்நூல் எல்லோர்க்கும் பயன்படுமென்று கருதுகிறோம்.

* * *

வரப்பேற்றோம்

நகர செய்தி (மாத வெளியீடு)

[ஆசிரியர்: எம. வைகுண்டம்; கிடைக்குமிடம்; செங்கை செய்தி அலுவலகம் [illegible]; விலை அணா 2]

* * *

சாந்தி

(திங்கள் இதழ்)

[ஆசிரியர்: டாக்டர் எம். வ. சீ; கிடைக்குமிடம், சாந்தி காரியாலயம், 111, பி. பி. ரோடு, சென்னை-5 விலை அணா 2]

* * *

நீத்தார் நினைவு மலர்

[இலைக்கண்டபுரம் தோழர் ம. ஆறுமுகம் அவர்களின் நினைவு குறித்து வந்த வெளியீடு]

சொற்ப பிரதிகளே அச்சிடப்படுகின்றன

தேவைக்கு உடனே முந்துங்கள்

"திராவிடன்" பொங்கல் மலர்

விலை ரூபாய் ஒன்று

தமிழ்ப் பெரியார் திரு. வி. க., அறிஞர் அண்ணா, கவிஞர் பாரதிதாசன், தோழர் கி. ஆ. பே. விசுவநாதம், தோழியர் சத்தியவாணிமுத்து உள்பட எழுத்தாளர்கள் பலரும், மற்றும் சில தோழர்களும் தீட்டியுள்ள கட்டுரைகளுடன், தலைவர்கள்—தொண்டர்களின் உருவப்படங்களைக் கொண்டு சிறந்தமுறையில் வெளிவருகிறது

திராவிடர் திருநாளன்று எல்லா ஊர்களிலும் விற்பனைக்குக் கிடைக்கும்.

குறிப்பு:—"திராவிடன்" சந்தாதாரர்களும், ஏனையோரும் தபால் மூலமாக மலர் வேண்டியிருப்பின், மலருக்கான விலையைத் தபால் ஸ்டாம்புகளாகவோ அன்றி மணியார்டரோ அனுப்பினால் மட்டுமே பிரதிகள் அனுப்பப்படும்,

விவரங்களுக்கு:— "திராவிடன்" 18, செங்காளம்மாள் கோவில் தெரு ஜி. டி. சென்னை.

சென்னையில்

மூட்டைப்பூச்சி ஒழிப்பு!

329 நிர். ஸ்டால்

தேனாம்பேட்டை பொருட் காட்சியில்

ரெஜினா மூட்டைப்பூச்சி

பவுடரை

அனைவரும் உபயோகிக்கவும்

: நித்திரைக்குப் பாதுகாப்பு;

G பழநியப்ப முதலியார், மதுரை

பொங்குக பொங்கல்

உயர்ரக அட்டையில் இருவண்ண அச்சேறிய பொங்கல் வாழ்த்துரை

100 இதழ்	ரூ 5-8-0
50 இதழ்கள்	ரூ 3 0—0

1000-க்கு மேல் ஆர்டர் தருவோர்க்கு 25% கழிவு.

நிலவு அச்சகம்,

நுங்கம்பாக்கம். :: சென்னை-6

பொழுதுபோக்கு

தமிழ்

கமலா	—	இன்பவல்லி
சரஸ்வதி	—	ஸ்ரீ முருகன்
கினிமா	—	உத்தமபுத்திரன்
பிரபாத்	—	அபூர்வ சகோதரர்கள்
வெலிங்டன்	—	,,
பிளாசா	—	தெய்வநீதி
[illegible]ராணி	—	வாழ்க்கை
பாரகன்	—	,,
லட்சுமி	—	,,
கிரௌன்	—	ஒளே ஒளேசலா

ஹிந்தி

அசோக்	—	அர்தாஜ்
பிராட்வே	—	டோலி
சாகர்	—	பத்மினி
சித்திரா	—	நாடியா-கி-பார்
ஸ்டார்	—	ரோஷ்னி
செலக்ட்	—	தில்-கி-துனியா
சாகர்	—	ஜாக்கி
கெயிட்டி	—	லெஸ்லி
(மலையாளம்)		காசத்ராம்

ஆங்கிலம்

Minerva	—	Meet The Killer Boris Karloff
Casino	—	Mourning Becomes Electra
New Globe	—	Mr. Soft Touch Silver Lining
New Elphinstone	—	Task Force
Midland	—	Reign of Rerror
Roxy	—	The Sea Hawk

சென்னை புளியந்தோப்பு

தி. மு. கழக

பொதுக்கூட்டம்

8—1—50 ஞாயிறு மாலை 5 30 மணிக்கு சென்னை புளியந்தோப்பு நாச்சியாரம்மாள் தெருவிலுள்ள மைதானத்தில், புளியந்தோப்புக் கிளை துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர்கள்

இரா. நெடுஞ்செழியன்

என் ஜீவரத்தினம்

காஞ்சி. மணிமொழியார்

வி. முனுசாமி

சொற்பொழிவாற்றுவார்கள்

எரிட்ரியாகலக நிலைமை

லண்டன், ஜன 6—

மால்டாவிலிருந்து கிழக்கு ஆப்பிரிக்கா கடற்படையில் சேருவதற்காக போயிருந்த பிரிட்டிஷ் நாசகாரி 'கோகேட்' எரிட்ரியாவிலுள்ள கலக நிலைமையை அடக்க மஸாவாவுக்குச் சென்று என்று தெரிகிறது. இந்த கப்பல் அந்த இத்தாலியின் கலைகர் எதுவரையோ கோமசன்டத்திச் செல்வார் என்று கூறப்படுகிறது.

முன்னாள் இத்தாலிய காலனியான எரிட்ரியா இப்பொழுது பிரிட்டிஷ் ஆட்சி பொறுப்பில் இருந்து வருகிறது. அதை அபிஸீனியாவுடன் சேர்க்கப்பட வேண்டுமென்பதே அங்கு ஏற்பட்டுள்ள இக்கலகத்திற்கு காரணம்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press 2/45. Muthumari Chetty Street Madras-1.

வானொலி

(8-1-50 ஞாயிற்றுக்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழ்ச் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 பாப்பா மலர்
8 30 திருச்சியில் உள்ளபடி

பிற்பகல்:

1-00 மதுரை விஜயலட்சுமி—குழலிசை
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
[illegible] தமிழ்ச் செய்திகள்
3-00 வி. எஸ். சீனிவாசன்—பாட்டு டி. ஆர். ராஜப்பா—வயலின் எ. கண்ணன்—மிருதங்கம்

மாலை:

4-00 சதாரம் (இசைநாடகம்)
5-30 திருச்சியில் உள்ளபடி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6 15 தியாகராஜ உத்சவம்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 வாரப் இசை நிகழ்ச்சி
8 00 திருச்சியில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 திருச்சியில் உள்ளபடி
10-30 முடிவு

* * *

திருச்சி

[395·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சே. ஆர். வெங்கடாசலம்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-20. தியாகராஜ உத்சவம்

பிற்பகல்:

12-30 செங்கோல் மடவாரம்—கவிதை நாடகம்
12-35 வரவேற்பு நாடகம்
12-50 இசை நாடகம்
1-00 மணிமலர்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சகோதரர்கள்—ஒலிப் திவு
2 00 தமிழில் செய்திகள்
2-10 பெண்ணுலகம்
2-30 சிங்கள் வேட்டவை (இ. த.)

மாலை:

5-00 தியாகராஜ உத்சவம்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சே. ஆர். வெங்கடாசலம்—பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரகானம் (இசைநாடகம்)
7-45 அது ஒரு காலம் (பேச்சு)
8-00 தியாகராஜ உத்சவம்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 தியாகராஜ உத்சவம்
10-00 முடிவு.